www.tamilarangam.net

# தமிழீழ அகதிகளே! நில்லுங்கள்!
# நாம் என்றும் அகதிகள்தானு!
# எமது எதிர்காலம் என்ன?
# சிந்திப்போம்! ஒன்றுபடுவோம்! செயலாற்றுவோம்!

பௌத்த சிங்கள இனவெறியரசும் இனவாத படைகளும் நடத்திய தமிழர் இன அழிப்பு நடவடிக்கையின் போது, சொத்து சுகத்தை உற்ருர் உறவினரை இழந்த நாங்கள், உயிரைக்காக்க 1983க்கு பின்னர் பாக்கு நீரிணை வழியாக இங்கு வந்தோம். இன அழிப்புக்கு எதிராகவும் தேசிய சுதந்திரத்திற்காகவும் தமிழீழ மக்கள் போராடிக்கொண்டிருந்தனர். போராட்டத்துக்கு இந்திய மக்களும்-விசேடமாக தமிழக மக்களும், உலக மக்களும் பெரும் ஆதரவு தெரி-வித்து உதவிவந்தனர். எங்களது போராளி இயக்கங்கள் அரசுக்கும் படைகளுக்கும் எதிராக போர்புரிந்து கொண்டிருந்தனர். 'தீபாவளிக்-கும்' 'தைப்பொங்கலுக்கும்' தமிழீழம் வாங்கிடுவோம். (எங்கிருந்து) **அகதிகளே! உங்களை சொந்த மண்ணில் வாழ வைப்போம், என்று சபதம் செய்தனர்.** தமிழக மக்க-ளின் இன உணர்வுக்கும், ஆதரவுக்கும், எழிச்சிக்கும் அடிபணிந்த இந்-திய அரசியல் கட்சிகள், ஆளுங்கட்சி, எதிர்கட்சி என போட்டி போட்ட' புடி தமிழக மக்களின் பொருளியல் வளங்களை தங்களது சொந்த சொத்து போல வாரிவழங்கினர். **அகதிகளே! உங்களை நிம்மதியாக இருக்கவைத்து பாதுகாப்போம் அமைதி வந்ததும் அனுப்பி வைப்போம் என முழங்கினர்** தங்களையும் தங்களின் கட்சிகளையும் மக்களிடம் மறுவார்ப்பு செய்து வளர்த்துக் கொண்டனர். தேர்தலிலும் அதற்கான அறிக்கைகளிலும் எங்களைப்பற்றி சக்கை போடு போட்டனர்-

வரலாறு முழுவதுமே ஆளப்பட்டும் அடக்கப்பட்டும் வந்த எங்-களுக்கு பின்னல் 'அகதி' என்ற பெயரும் சேர்ந்துகொண்டதால் நண்-பர்களும் எதிரிகளும் கூட தங்கள் தேவைக்காக எங்களை பயன்படுத்-திக் கொள்வது இலகுவாக இருந்தது. நாங்களும் **விழிப்புணர்வு இல்லாததால் விடுதலை வாங்கித்தரக்கூடிய பொருளொன்றும் அமைதியை அவர்களே ஏற்படுத்தி தருவார்கள் என்றும் நம்பினோம்.** அகதி வாழ்வின் உண்மை நிலையை தாங்கி அகதி வாழ்வில் கூட தற்காலிக சுகம் கண்டுவந்தோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்திலிருந்த ஒவ்வொரு இயக்கமும் தங்கள் தங்கள் தேவைக்கும் ஏற்ப மக்கள் என்ற பதத்தையும், மக்களின் பங்கையும் பயன்படுத்தினார்கள். அவர்கள் முழுமக்களையும் போராட்டத்தில் இணைத்து பங்களிப்பு செய்வதின் மூலம் "மக்கள் விடுதலையை வென்றெடுப்பது" என்ற நிலையை நடைமுறையில் தவறான அரசியல் பார்வையாகவே கருதினார்கள். நாங்கள் அதுவும் அகதிகளாக இருந்ததால் அத்தலைமைகள் எந்த அரசியல் வரைவுகளுக்குள்ளும் அடக்கவில்லை எங்களை. இந்தியாவில் தத்தமது இயக்க வளர்ச்சி தேவைக்கும் இலங்கை அரசின் கொடுமைகளை காட்டி உலக அனுதாபத்தை கோரவும இயக்க தலமைகளுக்கு தேவைபட்டது. மொத்த அகதிகளின் கூட்டு இலக்கமும், துயரம் தோய்ந்த எங்களது படங்களும், சில பேச தெரிந்த அகதிகளின் வாக்கு மூலங்களும், ஒலி, ஒளி நாடாக்கள் தயாரிக்க தேவையான உதவிகளும் தான். இதற்கு மேலாக தாங்கள் வந்து செல்லும் தங்குமிடங்களாக முகாம்களை பயன்படுத்தினர். நிர்க்கதியான நிலையிலிருந்த அகதிகள் சிலரைதமது குறுக்குவழி செய்கைகளுக்கு பாவித்தனர். போராட்ட வளர்ச்சிக்கு தேவையான பொருள்களை வைத்து எடுத்து செல்லும் மையமாக பாவிப்பதற்கு பதில், சிலர் போதைவஸ்துக்களையும் தமக்கு வேண்டிய பொருள்களையும் வைக்கும் மையமாக பயன்படுத்தினர். இது பெரிய முகாமான மண்டபம் முகாமிலேயே நடந்தது. இத்தகைய செய்கைகளெல்லாம் இந்திய அரசுக்கும் உள்படைகளுக்கும் தெரிந்தும் சிலவேளைகளில் அவர்களது ஆலோசனையிலும் நடந்தது கவனிக்கதக்கது. இவ்வாறாக இயக்க தலமைகள் அகதிகளாகிய எம்மத்தியில் போராட்ட வேலைகளை இவ்வாறே வகுத்து செயற்படுத்தி வந்தனர்.

இந்திய மாநில-மத்திய அரசுகள், கட்சிகள் அவற்றின் ஆளுமை நிலைக்குகந்தபடி தமிழக-இந்திய மக்களின் இன உணர்வையும் மனிதாபிமான ஆதரவையும் கண்டு தாங்கள் ஆட்சிகளை கைபற்றவும் தக்கவைக்கவும் கண்ணை மூடிக்கொண்டு தமிழீழ ஆதரவு பற்றி கதை அளந்தனர். உண்மையில் இந்திய மத்திய அரசு தெற்காசியாவில் உள்ள சிறிய நாடுகளுக்குதான் பெரியண்ணனாக சட்டாம்பிள்ளையாக மேலாதிக்கம் செலுத்தும் ஆசைக்காக இலங்கை அரசை தனது கட்டுபாட்டுக்குள் கொண்டுவர தமிழீழ போராளி இயக்கங்களை நிர்ப்பந்தக் கருவியாக பயன்படுத்திவிட்டு தூக்கியெறியும் கண்ணோட்டதிலேயே அவர்களுக்கு உதவி வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரு தாத்தா காலத்திலிருந்து, உலக நாடுகளில் எங்கு என்ன பிரச்சனைகள் இருந்தாலும் ஒரு (சமாதான) புறாவை பறக்க விட்டு விட்டு கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனை உலகுக்கு காட்டி வந்தது காந்தி குடும்பம் அல்லது மத்தியரசு. தமிழீழ அகதிகளாகிய எங்களையும் அகதி முகாங்களையும் உலகுக்கு காட்டியபடி தனது நிர்பந்தகருவிகளான போராளிகளுக்கு ஆயுதம், ஆயுதபயிற்ச்சி, நிதி, முகாம் என்பன அமைத்து கொடுத்தது. இலங்கை அரசை போராளிகளின் வெறும் இராணுவ நடவடிக்கை மூலம் நிர்பந்தம் செய்து தனது மேலாதிக்கத்துக்கு உட்படுத்த இந்திய வண்ணமயில் தோகை விரித்தாடியது 1986 வரை. 1987 ஒப்பந்தத்தின் பின் நிர்பந்த கருவிகளை கை விட தொடங்கியது. எங்களது இயக்க தலைமைகளோ தமது குருட்டாட்ட அரசியலாலும், குறுக்கு வழி வளர்ச்சி மூலம் ஊதிப்பெருக்கும் ஆசையில் எவ்வகை தெளிவுமின்றி வண்ணமயில் ஆட்டத்தில் சிக்கிவிட்டனர் சிலதலமைகளோ 'பிரிவாதிக்க விழிப்புணர்வு' 'வங்கத்தின் பாடம்' என பேசிக்கொண்டே இந்திய நிர்பந்த வலையில் நன்ருக மாட்டிக் கொண்டனர்.

தந்தை செல்வா தொடங்கி அண்ணன் அமிர் வரை எங்கள் அகிம்சை தலைவர்கள் 'இந்தியரசு நமது நண்பன்' என்றே பாலபாட அரசியல் கற்றுதந்தனர். (கவனிக்கவும் நமது நண்பர்கள் தமிழக இந்திய மக்கள் என்று சொல்வில்லை) ஆயுத தலைவர்களான பிரபா, உமா தொடங்கி டக்ளஸ், ராஜன் வரை தமிழகஇந்திய மக்களை எங்கள் நண்பர்கள் என்று சொல்வதில்லை - அவர்களின் வசதிப்படி இந்தியரசை பயன்படுத்த வேண்டும். 'இந்தியரசு நமது நண்பன்' என்றே உயர்கல்வி அரசியல் போதிக்கிருர்கள் அகதிகளாக அதுவும் இந்திய மண்ணில் இருந்ததால் பாலபாட அரசியல் தான் தெரிந்திருந்தோம். இந்த ஆயுத தலைவர்கள் தங்கள் சொந்த மக்கள் மீதே சவாரி செய்யும் போது தமிழக - இந்திய மக்களை எப்படி நண்பர்கள் என்பார்கள்?. நாங்களே நாம் வாழும் சமுதாய அமைப்பு பற்றியும், காலங்காலமாக தீர்க்கபடாதிருக்கும் மக்களது அடிப்படை தேவைகள் பற்றியும், இந்த சமூகத்தின் கொடுமைகள், அரசியல் கட்சிகளின் பித்தலாட்ட ஏமாற்றுக்கள் குறித்தும், அறிய விரும்புவதில்லை. இதற்கான மனபக்குவமும் எங்களுக்கு இல்லை. யாரும் நேர்மையுடன் சொல்வதுமில்லை. இதனுல் இலங்கையிலும் சரி, இந்தியா மற்றும் உலக நாடுகளில் சரி மக்களுக்கும்-அரசுகளுக்கும் இடையிலான முரன்பாடு குறித்தும், மக்களின் எதிரிகளாக அரசும் அதனை கட்டிகாத்துவரும் தேர்தல் கட்சிகள் பற்றியும் அறியாமலே இருந்து வருகிறோம். இதன் விளைவு அரசுகள் மக்களை காட்டி எங்களை ஏமாற்றுவது புரியாமல் போய்விடுகிறது. நாங்களோ அரசுகள் மீது வெறுப்பு கொள்ளும் போது அந்த மக்களை வெறுக்கின்ற, எதிர்கின்ற தவறை செய்து வருகிருேம். ஆகவே அரசுகளையும் அரசின் பாதுகாவலர்களான இந்த பிற்போக்கு அரசியல் கட்சிகளையும், இவர்களால் ஏமாற்றப்பட்டு அடக்கப்படுகின்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பெருந்திரளான மக்களையும்' பிரித்து பார்க்க அறிந்து கொள்வோம் மக்களாகிய எங்களுக்கு மக்கள்தான் நண்பர்கள். அவர்கள்தான் முக்கியம். அரசுகள் அல்ல என்பதை எதிர்வரும் காலங்களில் நிரூபிப்போம்.

அகதிகளாகிய எங்களுக்குள்ளேயேயிருந்து எங்களது சிந்தனைகளை மழுங்கடித்து, தேசவிடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிக்க விடாது, உண்மையான மனித விடுதலை குறித்து உள்ளுணர்வுகளை எழுச்சிபலத்தை பிடிங்கி அதனிடத்தில் சீர்திருத்தவாத சிந்தனையையும் அன்னிய சார்பு நம்பிக்கையையும் ஊட்டுவது, நிலவும் ஏற்றத்தாழ்வான சமூகத்தையும், அதன் சிதிலமடைந்த வாழ்வையும், இன, மொழி, மத, சாதி வெறியர்களின் அடக்குமுறையையும், அழிப்பையும் அகிம்சை வழியில் தீர்க்கலாம் எனவும், இரவும், பகலும் போல் இவை மனித வாழ்வில் இருக்கவே செய்யும் என்றும் கூறி **தமிழீழ மண்ணில் எமது சகோதரர்கள் சிந்தும் இரத்தத்துக்கு வேதாகம விளக்கமளித்து உண்மை வாழ்வின் அர்த்தத்தை காணவிடாது மறைத்து எலும்பு துண்டு சலுகைகள் மூலம் உயிரை காக்க சொல்லும் தீயசக்திகள்.** இவர்கள் காலம் பூராக தாங்கள் அகதிகளாக இருக்கவைப்பதின் மூலம் தாங்கள் தலைவர்களாகயிருந்து எல்லா சுகபோகங்களையும் அனுபவித்து சாகவிரும்புகிறார்கள். இன்னமும் புரியவில்லையா? சந்திரகாசன் தலைமையில் இயங்கும் "ஒபர்" என்ற அமைப்புதான் அது.

இவர்கள் சமூக சேவகர்களாகவும், சிலவேளை பாதிரியார், சாமியார் போல ஆழ்ந்து அனைத்தும் துறந்த மதவாதிகளாகவும் எங்கள் முன் அடிக்கடி காட்சி தருவார்கள். இவர்கள் அகதி மக்களது துன்பதுயரங்களை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். உலக நாடுகளில் எங்கெல்லாம் மக்கள் தங்கள் சுபிட்ச சுதந்திர வாழ்வுக்காகவும், இன, தேச, வர்க்க வெறிகளுக்கு எதிராக சுதந்திர சமத்துவத்திற்காக ஆயுதம் தாங்கி போராடுகிறார்களோ, அங்கும் அந்த மக்களின் அகதி முகாம்களிலும் குணஇயல்புகளில் சந்திரகாசன் போன்ற தலைவர்களும் "ஒபா" பேன்ற அமைப்புகளும் இருக்கின்றன. பாலஸ்தீன, லத்தீன் அமேரிக்க மக்களின் அகதிமுகாம்களில் இது தெட்டதெளிவாக தெரியும். இவர்கள் வெளிப்படையாகவே சீர்திருத்தம், சமூக சேவை, மறுவாழ்வு, புனர்வாழ்வு என திரிவார்கள். இவர்களையும், இவர்களது பின்னணி பற்றியும் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. ஆயுத போராட்டங்களிலும், அகதி முகாம்களிலும் திரியும் இந்த அகிம்சா போர்வை திருடர்கள் அகதிகளையும், தேசத்தின் இடிந்து நொறுங்கிய கட்டிடங்கள், தேவாலயங்களை அழிந்த இயற்கை வளங்களை புகைப்படங்களாக எடுத்து, ஒரு நீண்ட ஆங்கில அறிக்கை தயா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரித்து அவற்றை உலகநாடுகளிலுள்ள மனிதாபிமான ஜனநாயக இயக்கங்களிடம் காட்டுவார்கள். மறுபுறம் உலக மக்களின் உழைப்பை தேசங்களின் செல்வத்தை சுரண்டி தின்று கொழுத்த அமெரிக்க-ரசியா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் மக்களது போர் குணத்தை மருந்துகள் வாயிலாகவும் சிந்தனை ரீதியாகவும் உள்ளுக்குள்ளேயே சிதைக்க அந்நாடுகளின் உளவு நிறுவனங்களால் திட்டமிட்டு இயக்கப்படும் நிதி நிறுவனங்களிடம் சர்வசேச மக்கள் மறுவாழ்வு என்ற பெயரில் அத்தகவல்களை காட்டியும் அவற்றிடம் வாங்குகிற கறுப்பு பணத்தையும், மருந்துகளையும் ஒன்றாக்கி இந்த தீயவர்கள் ஒரு 'அகதி மறுவாழ்வு மையத்தை' திறக்கிறார்கள். இதன் மூலம் மக்களது தினசரி கஷ்ட ஜீவன வாழ்வுக்கு சில சில்லறைகளை கொடுத்தும் உதவிகள் புரிந்தும் எங்களது நெடிய போராட்ட உணர்வுக்கான தேவைகளை வேரறுத்து விடுகிறார்கள். எங்களிடமிருந்த சுதந்திர தாகத்தை தியாக தன்மைகளை எல்லாம் 'சீர்திருத்தம் என்ற அரைகுறை பிரசவந்தியை' நோக்கி திருப்பி விடுகிறார்கள்.

அகதிகளாகிய நாங்கள் பல வழிகளாலும் உயிர் வாழ்வுக்கு ஏங்குகிறபோது இவர்களது இந்த சில்லறைகள் எம்மை திருப்திபடுத்துவது இயல்புதான். இவர்களது தீய நோக்கம் கொண்ட பின்புலத்தை சொல்பவர்கள் மீது எரிந்து விழுவதும் கோபங்கொண்டு இந்த வாழ்வையும் கெடுக்க பார்க்கிறார்கள் என்று கூறுவதும் உண்மைதான். ஆனல் இன்று ஒரு உண்மையை தெரிய மறுத்து எங்களது எதிர்கால சந்ததியையே அவர்களது நலனுக்காக அகதிகளாக்குவது எந்த வகையில் நியாயம் என்று எங்களை நாங்களே கேட்டுப் பார்க்க வேண்டியுள்ளது. அவர்களது உண்மை பின்புலத்தை அறிந்து கொள்வோம். தீய பாதைக்கு இரையாகமல் இருக்க கற்றுக் கொள்வது சரியானது.

இதன் மூலம் எமது சந்ததியை ஆவது அகதி வாழ்விலிருந்து சீர்திருத்த வாதத்திலிருந்து மீட்போம்

இந்த சமூக சேவை அமைப்பின் தலைவர்கள். இலங்கை அரசுடனும் இந்தியஅரசுடனும் வல்லரசு நாடுகளின் உளவு நிறுவன அதிகாரிகளுடனும் சில வேளைகளில் போராளி இயக்கங்களின் தலைவர்களுடனும் ஒரே நேரத்தில் தொடர்பு வைத்து இருக்கிறார்கள். மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வைக்கு வெள்ளை வேட்டி கட்டிய மகான்களாக தோற்றமளிக்கும் இத்தலைவர்கள் சமூக அரசியல் விழிப்புணர்வு குறைவாக இருக்கும் அகதிகள் மத்தியில் அகதி மருத்துவம், கல்வி, சுய உழைப்பு உதவி........ .......... என பல பெயர்களில் நுழைவார்கள், எங்கள் சிந்தனையையும் வாழ் நிலையையும் தீர்மானிக்கும் இவ் அடிப்படைகளூடாக எமது கழுத்தில் கைவைத்து சுய உணர்வுகளை மெதுவாக மெதுவாக அறுத்து திசை மாற்றுவார்கள். **இது போன்ற அமைப்புக் களுக்கு தேவையான வடிவத்தை கூட்டத்தை அகதிகள் மத்தியிலுள்ள படித்த சமூக சிந்தனை அரும்பி வருகின்ற ஆண், பெண்களை** 'வேலையும்-சேவையும்-வருவாயும்' எனக் கூறி மெல்ல ஒரு அமைப்பு கட்டு மானத்தை உருவாக்கிக் கொள்வர். இந்த நல்ல சிந்தனையுள்ள ஊழியர்கள் தான் இந்த தீய அமைப்புக்களுக்கு சிறந்த உழைப்பாளர்களாக பயன் படுத்தப்படுவர் இந்த படித்தவர்களுக்கு கூட தங்கள் அமைப்பின் அடி அந்தலை பற்றி தெரியாது இருப்பதும்-தெரிந்தும் வாழ்வை ஓட்டு வதும் சுவரஸ்யமான ஒரு விசயம். இவர்கள் விழித்துக் கொள்ளும் போது இவ் அமைப்புக்கள் சலசலக்கும் என்பதில் ஐயம் இல்லை. இன்னோர் பகுதியும் உண்டு அவர்கள் விடுதலை இயக்கங்களுக்குள்ளா கவே மறைவாகவிருந்து தம்மை போராட்ட வீரர்களாக காட்டிக் கொள்வர். சர்வ சேத நிதி நிறுவனங்கள், தன்னார்வ குழுக்கள் கிறிஸ்து நிறுவனங்களுடன் தொடர்பு வைத்து [redacted] (பார்வைக்கு புரட்சிக்காரர்கள் போல் தெரிவார்கள்) போராட்ட பாதையையும், நல்ல போராளிகளையும் உண்மையான சமத்துவ பாதையிலிருந்து திசை திருப்புபவர்கள். இவர்களை இனங்காணுவது மிகவும் கடினம். இந்த வேலையில் கைதேர்ந்தவராகவிருக்கும் கௌரி காந்தன் என்ற சுப்பையா அல்லது A. G. காந்தன் தமிழீழ மக்களிடம் ஓரளவு அம்பலமாகியுள்ளார், என்பதையும் தெரிந்து கொள்வோம். இந்த தீய சக்திகள் உலக மகா வல்லுனர்களாக இருப்பார்கள். இதில் ஒரு **"சிறந்த தமிழ் அகிம்சா பயங்கரவாதியும், சி.ஐ.ஏ. C.I.A. ஏஜண்டுந்தான் சந்திரகாசன்" என்றும் ஏ.ஜீ. காந்தன் கிறிஸ்தவ தன்னார்வக் குழுவுடன் தொடர்புள்ள வெட்டி ஒரு பேர் வழி"** எனவும் இயக்க தலைமைகள்கூட பல தடவைகள் ஆனால் மொட்டையாக சொன்னது எங்கள் நினைவுக்கு வருகிறது. [redacted] சந்திரகாசகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைமையில் இயங்கும் "ஒபர்" அமைப்பும் அதன் விசயம் தெரிந்த விசுவாச ஊழியர்களும் (இவர்களில் சிலர் இயக்கங்களில் இருந்தவர்கள்) ராஜீவ் கொலைக்கு பின் அகதி முகாம்களில் கட்டாயம் அஞ்சலி, இரங்கல் கூட்டங்கள் நடத்த வேண்டும் என அகதிகளை வற்புறுத்தினார்கள். அகதி மக்களது வாழ்வில் "ஒபர்" அமைப்பு அரசியல் ஆதிக்கம் செலுத்த வந்திருப்பது. அவர்களின் 'அகதி மறுவாழ்வுக்கும் சமூக சேவைக்கும்' பின்னால் உள்ள அரசியல் பின்னணி குறித்து நாங்கள் அச்சம் கொண்டுள்ளோம். சில மாதங்களாக "ஒபர்" அமைப்புள் நடக்கும் ஊழல் சூத்திர விளையாட்டை அகதிகளால் காண முடிகிறது.

அகதிகளின் வாழ்க்கையை பயன்படுத்தி குளிர் காய்ந்து வரும் இயக்கங்கள், அரசுகள், தனி நபர்கள் என எல்லா சக்திகள் பற்றியும் உன்னிப்பாக கவனிக்கவும் விழிப்புணர்வை பரவலாக ஏற்படுத்துவதும் ஆன கடமை சிந்திக்கின்ற ஒவ்வொரு அகதிகளாலும் இன்று உணரப்பட்டு முன்னிற்கின்றது.

தமிழகத்தில் இருப்பவர்கள் மட்டுமே அகதிகளாக பார்க்கப்பட்ட நிலை இனியும் சரியானதாக இருக்க முடியாது. இந்தியப் படை வெளியேற்றப்பட்டு அரசு- புலிகள் தேனிலவு முடிந்து யுத்தம் மீண்டும் தொடங்கிய பின்னிருந்து இன்று வரை பல இலட்சம் மக்கள் தமிழீழ மண்ணிலேயே அகதிகளாக வாழ்ந்தும்-மடிந்தும் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தாங்கள் பிறந்த மண்ணில் உழைத்த பூமியில் அகதியாக உணவு, மருந்து, உறைவிடம், உயிர் பாதுகாப்பு இன்றி தினமும் மரணத்தை நோக்கியும் எதிர்காலத்தை எண்ணியும் மன பலத்தை- உடல் பலத்தை இழந்தும் வருகிறார்கள். இன்னும் ஓர் பகுதி இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ முடியாமலும்-விரும்பாமலும் இயக்க தலைமைகளுக்கு பயந்தும், உழைப்புக்காகவும், உயர் கல்விக்காகவும்.... .......... வேறு பல காரணங்களாலும் தங்களிடமிருந்த பொருளியல் வழிகளையும் உறவு முறை உதவியையும் பயன்படுத்திக் கொண்டு, மேலை நாடுகளுக்கு சென்றுள்ளவர்கள் (கனடா, இலண்டன், ஜெர்மனி, சுவிஸ்லாந்து, டென்மார்க், பிரான்ஸ்.......... என) இவர்களுள் பெரும்பகுதி ஒரு விதமான அகதி வாழ்வையே வாழ்ந்து வருகிறார்கள். தாங்கள் நினைத்ததை வாங்கவும், சிந்தனை செய்வதை வெளியிடவும் கூடிய நிலையிலுள்ளார்கள். ஆனால் இன்று இலங்கையிலுள்ள அகதி முகாம்களில் வாழும் தமிழீழ அகதிகள்தான் அகதிகளின் வட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்டு ஒரு வேளை கஞ்சிக்கு காத்திருக்கின்ற நலிந்த மக்கள் என்பதை மற்றய அகதிகள் உணர்ந்தாக வேண்டும்.

www.tamilarangam.net

அகதிகள் வாழ்வில் 'சபதங்களும்' 'முழக்கங்களும்' அவற்றின் முடிவுகளும் வேறாகி போய்க் கொண்டிருக்கிறது. இந்நிலையில் வாழ்வில் எந்த திருப்த்தியும் இன்றி எல்லாவற்றையும் வெறுத்து எதுவுமே சரிவராது சாத்தியப்படாது. யாரையும் நம்ப முடியாது. எதிரிகளே தங்களுக்கு தெரிந்த சமாதானத்தை ஏற்படுத்தட்டும், பின்னால் எல்லாத்தையும் பார்ப்போம் என விரக்தியின் விளிம்புக்கு அகதிகளில் பலர் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அகதிகளே! நமது வாழ்வுக்கும் சுதந்திரத்துக்கும் விடுதலைக்கும் என்றுமே மற்றவர்கள் பொறுப்பாக இருக்க முடியாது. ஆதரவாகவேயிருக்க முடியும். நமது தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் தேசத்தின் ஒவ்வொரு மனிதனும், மக்கள் பிரிவும், அகதிகள் அடங்க ஆற்ற வேண்டிய பங்கை நாங்கள் ஆற்றவில்லை. எமது போராட்டத்தில், இயக்க தலமைகளோ அவற்றை கண்டு முழு மக்களையும் திரட்டி போராடாததும், மக்களை பார்வையாளர்களாக்கியது. தலமைகளின் தவறான நடுத்தர வர்க்க சித்தாந்தத்தின் விளைவும் துரோகயிசத்தின் பலனுமாகும். ஆனால் மக்களாகிய நாங்களும் அக்கறையின்றியே இருந்து வந்துள்ளோம், என்பதை இன்று நினைத்து பார்க்க வேண்டியுள்ளது. இனியும் இயக்க தலமைகளை நம்பியிருக்க முடியாத சூழ்நிலைக்கு அவர்களே எம்மை வரச் செய்து விட்டார்கள்.

இறுதியாக இயக்க தலமைகள் தமிழீழ மக்கள் வெற்றியை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும், வெற்றி கண்டுவிட்டதாகவும் கூறி வருகிறார்கள். துரோக தலமைகள் கொழும்பிலும் இந்திய நகரங்களிலும் காத்துக் கொண்டிருக்கிறார்கள் புலிகளோ வெற்றியை நோக்கி மக்கள் செல்வதாக கூறி தலமைக்கு விரும்பிய யுத்தத்தில் ஈடுபட்டு நூற்றுக்கணக்கான போராளிகளை இழந்து கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலமை வேறுவிதமாகவுள்ளது. தினமும் அகதிகளாக மாறிக் கொண்டிருக்கும் தமிழீழ மக்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகிறது. அரசு படைகளின் 'நவீன கொலைகள்' அதிகரித்து வருகிறது.

அப்படியானால் அது உண்மை தமிழீழ மக்கள் வெற்றியை கண்டு விட்டார்களா? வெற்றியை நோக்கி செல்கிறார்களா?

www.tamilarangam.net

## அல்லது

தமிழீழ மக்களிடமிருந்து அன்னியப்பட்டு செல்லும் இயக்க தலமைகள், ஆதிக்க அதிகார பங்கீட்டு போட்டியில், எதிரிகளுடன் மாளிகைகளில் உட்கார்வதில் வெற்றியை கண்டு விட்டார்களா? வெற்றியை நோக்கி செல்கிறார்களா?

அரசியல் ஞானம் அதிகம் ~~தேவையில்லாத~~ அகதிகளால் புரிந்து கொள்ளக் கூடிய கேள்வியை அகதிகளான எங்களுக்கு நாம் வாழும் சமூக சூழலும் எங்கள் மீதான நெருக்கடிகளும் ஏற்படுத்தி தந்திருக்கிறது. இனியும் அகதிகளின் அடையாளத்தை யாரும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம். மக்களுக்காக போராடுவதாக கூறி அவர்களது அரசியல் வேலைப் பட்டியலின் கடைசிப் பக்கங்களில் எழுதப் பட்ட அகதிகளாகிய நாங்கள் எங்கள் வாழ்வுக்கு வழி அமைக்கும் பொறுப்பை அவர்களிடம் விட முடியாது. எங்கள் துன்ப துயரங்களை நாமே சிந்திப்போம். அவற்றை களைய நாமே முன் வருவோம். எங்கள் தேசத்தின் விடுதலைப் பாதை இருட்டில் தட்டு தடுமாறுகிறது. இந்த நிலை தேசத்துக்கு மாறாதவரை எம் அகதி வாழ்வுக்கும் மீட்சி இல்லை. கடந்த கால தவறுகளை நேர்மையுடன் கற்றுக் கொள்வோம். போராட்ட பாதையில் எங்கள் பங்கை நாங்கள் செய்வனே செய்வோம். நமதும் நமது சந்ததியினதும் எதிர்கால வளம் நிறைந்த வாழ்வுக்காக அனைத்து அகதிகளும் ஒன்றிணைந்து போராடுவோம். எங்களது நியாயமான அகதி வாழ்வை மாற்றும் போராட்டத்துக்கு உலக நாடுகளிலுள்ள அகதிகளும், மக்களும் ஆதரவை வேண்டி நடை போடுவோம்.

**தாய் மண்ணை எதிரிகளிடம் இருந்து மீட்டு சுதந்திரமாக வாழ,**

**எங்களின் அகதி வாழ்வை நீங்களே முடிவுக்கு கொண்டு வர,**

**தமிழீழ தேச சுதந்திர போராட்டத்தை தொடரப் போகிறோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு :

# தேசபக்த முன்னணியினர் கழகம் - தமிழீழம்

# Patriotic Vanguard's Organization of Thamil Eelam

---

வாசிப்போம் தேசபக்தன்.

விமர்சிப்போம் தேச பக்தனை

ஒன்றுபடுவோம். தமிழீழ தேச விடுதலைப் பாதையில்.

---

வாசகர்களே ! இவ்வெளியீடு மிகுந்த நெருக்கடிக்கு மத்தியில் உங்கள் கைகளை வந்தடைந்திருக்கிறது. நீங்கள் மற்ற வாசகர்களது கைகளுக்கு மாற்றி உதவுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்